**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர்**
**மாண்புமிகு (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**
**அவர்களினால் வழங்கப்பட்ட அறிக்கை**

**இலங்கைக்கான மூன்றாம் சுற்று உலகலாவிய காலக்கிரம மீளாய்வு**
**2017 நவம்பர் 15, ஜெனீவா**

---

திரு. உப தவிசாளர் அவர்களே!
மேன்மை தங்கியவர்களே!

கௌரவ பிரதிநிதிகளே!

- எமது நாட்டிற்கான மூன்றாவது உலகலாவிய காலக்கிரம மீளாய்வில் இலங்கையின் தூதுக்குழுவை தலைமைதாங்கி நான் இங்கே சமூகமளித்திருப்பதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன். இலங்கையின் தூதுக்குழுவானது வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதியின் அலுவலகம் மற்றும் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கான நிரந்த தூதரகம் ஆகியவற்றின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது.

திரு. உப தவிசாளர் அவர்களே!
கௌரவ பிரதிநிதிகளே!

- இலங்கை மக்களால் தலைமை தாங்கப்பட்ட 2015 ஜனவரி 8 மற்றும் ஆகஸ்ட் 17 ஆகிய திகதிகளில் இடம்பெற்ற இரண்டு வரலாற்றுத் தேர்தல்கள் வாயிலாக புதுப்பிக்கப்பட்டு, மாற்றியமைக்கப்பட்ட உள்நாட்டு அமைப்பின் பின்னணியில்; இந்த மீளாய்வில் இலங்கை பங்குபற்றுகின்றது. மனித உரிமைகளை வலுவூட்டி, மேம்படுத்தி, பாதுகாத்து, உயர்த்துவதற்காகவும், ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுவூட்டுவதற்காகவும், நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்திற்காகவும், அனைவரையும் சமமாக நோக்குதல் மற்றும் அனைவருக்குமான மரியாதைக்காவும், பல்லின சமுதாய சூழலை உயர்த்துவதற்காகவும், அனைத்தையும் உள்ளடக்கியதும், நாட்டின் சமமான வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்குமாகவே இலங்கை மக்கள் தமது வாக்குகளை வழங்கினர்.

- 2015 ஜனவரி 8ஆந் திகதிய ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றியானது, ஜனாதிபதி சிரிசேன அவர்களால் தலைமை தாங்கப்படும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களால் தலைமை தாங்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளையும் இணைப்பதனை இயலுமாக்கியதனுடாக, எமது நாட்டின் அரசியல் கலாச்சாரத்தில் அடிப்படை மாற்றமொன்றை ஏற்படுத்தியது. அவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள தேசிய கூட்டமைப்பு அரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை கையாளுவது தொடர்பில் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்த நாட்டை, இலங்கையின் பிரஜைகள், ஐக்கிய நாடுகள் தாபனம் மற்றும் சர்வதேச சமூகங்களின் ஈடுபாடு மற்றும் பாரிய திறந்த தன்மை வாயிலாக அப்பால் நகரச்செய்தது.

- ஆதலால் இன்று, மனித உரிமைகள் மீது கவனம் செலுத்துவதற்கான ஒரு புதிய, சாத்தியமான தலைப்பின் கீழும், செயலாற்றல் மிக்க திசையிலும் இலங்கை இந்த மூன்றாம்

சுற்று உலகலாவிய காலக்கிரம மீளாய்வில் பங்குபற்றுகின்றது. நாங்கள் பின்வரும் விடயங்களுடன் இந்த அமர்வில் பங்குபற்றுகின்றோம்:

- ஈடுபாட்டிற்கான புதுப்பிக்கப்பட்டதொரு மனநிலை,
- நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் அனைத்து பிரஜைகளினதும் மனித உரிமைகளை மேம்படுத்தி, பாதுகாத்து, உயர்த்துவதற்கான புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை மற்றும் ஈடுபாடு,
- சுய ஆய்வு, கற்கை ஆகியவற்றுக்கும், பிரஜைகளின் நலனிருப்புக்கான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் விமர்சனங்கள் உதவுவதனால், விமர்சனங்கள் உள்ளடங்கலான நோக்குகளை கேட்பதற்கு பாரியளவில் திறந்து காணப்படுதல்,
- அனைத்து பிரஜைகளினதும் உரிமைகளை பாதுகாத்து, அனைவரினதும் கௌரவத்தை உயர்வடையச் செய்யும் வகையில் எமது தேசத்தை நல்லிணக்கமுடைய, நிலையான, சமாதானமும், சௌபாக்கியமுமுடைய நாடாக மாற்றுவதற்கான நிலையான உறுதிப்பாடு.

கௌரவ பிரதிநிதிகளே!

- நீங்கள் அனைவரும் அறிந்த வகையில், எந்த தேசமும் சவால்கள் எதுவுமற்றதாகவும், மிகச்சரியானதுமாக இல்லை. மனித உரிமைகளை மேம்படுத்தி, பாதுகாப்பதானது, செயற்பாட்டிலுள்ள நிலையான செயலாகவுள்ளது என நாங்கள் அங்கீகரிக்கின்றோம். மிகவும் அதிகமான ஈடுபாடுகளும், உறுதிப்பாட்டிற்கான அதிகமான அர்வமும் காணப்படுகின்ற போதிலும், இதனை ஒரே இரவில் அடைந்து கொள்ள முடியாது. எம்மைப் பொறுத்த வரையில், உலகலாவிய காலக்கிரம மீளாய்வு நடைமுறையானது இந்த உண்மையை அங்கீகரிப்பதற்கும், ஒவ்வொரு நாடும் தம்மைத் தாமே மதிப்பீடு செய்து, சிறந்த செயற்பாட்டை பகிர்வு செய்து, எமது நாடுகளின் தனிநபர்களுக்கு கரிசனைகளை எடுத்தியம்புவதற்கான படிமுறைகளை ஒருவருக்கொருவர் ஆதரவளித்து உதவுவதற்கான அடிப்படைகளை குறியிலக்காக் கொண்டமைந்துள்ளது. தேசிய கூட்டு அரசாங்கத்தின் மனித உரிமைகள் தொடர்பான ஈடுபாடுகள் தொடர்பில் இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் பலர் கேள்விகளை எழுப்புகின்றனர். இந்த விடயத்தில், அமைதியின்றி இருப்பதும், வினாக்களைத் தொடுப்பதும், ஏமாற்றமாக உணர்வதும் உண்மையிலேயே இயல்பானதாகும். இலங்கையை அவ்வாறு விமர்சிப்பவர்கள், இலங்கை அவற்றை முறையாக செயற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே அதனைச் செய்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே.

  சந்தர்ப்பங்களிலும் இலகுவானதொரு விடயமல்ல. எமது சிறந்த நோக்கங்களில், சர்வதேச களத்தில் ஏற்படும் நகர்வுகள் மற்றும் மாற்றங்கள், பொருளாதார பாதிப்புக்கள், இயற்கை அனர்த்தங்கள், அரசியல் அபிவிருத்திகள் போன்ற அனைத்தும் தாக்கமும், பாதிப்பும் செலுத்துகின்றன. நாங்கள் அவற்றை அங்கீகரித்து, நிர்வாக மற்றும் பயிற்சித் தேவைகளை அடையாளம் காண்பதற்காகவும், எமது நிறுவனங்களை பலமூட்டுவதற்காக அவற்றை மறுசீரமைப்பதானது கட்டாயமாக கையேற்கப்படல் வேண்டும் என்ற அடிப்படையிலும் முறையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். எங்கள் பிரஜைகளுக்கு எமது நிறுவனங்களின் சேவைகளை வழங்குவதனை மேம்படுத்துவதற்குத் தேவையான சாத்தியமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக நபர்களை ஈர்ப்பதற்கு நாங்கள் மேலும்

நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். அனைத்து பிரஜைகளுக்கும் நன்மைகளை பயக்கவல்ல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எமது நேரான குறிக்கோளும், கண்டறிதல்களும் இன்னும் உறுதியாக பேணப்படுவதுடன், ஏனையவர்களிடமிருந்து சாந்தம், கவன ஆலோசனை ஆகியவற்றுடன் கூடிய விடயங்களை கேட்டறிவதற்கு நாங்கள் திறந்திருப்பதுடன், மாற்றங்களை நோக்கிய சாத்தியமான நடவடிக்கைகளை முன்னெடுகிகின்றோம்.

- இலங்கை தற்போதைய அமர்வில் ஈடுபடுவதற்கு ஆர்வத்தை வெளிக்காட்டிய நாடுகளை நாங்கள் வாழ்த்துவதுடன், அதிகம் கவனம் மிக்கதும், ஆக்கபூர்வமானதுமான கலந்துரையாடல்களுக்கு அனுமதிக்கும் வகையில் வினாக்களை ஏற்கனவே அனுப்பிய அனைத்து நாடுகளுக்கும் நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- நீங்கள் அனைவரும் அறிந்த வகையில், கடந்த 2012இல் நடைபெற்ற உலகலாவிய காலக்கிரம மீளாய்வு தொடக்கம் இலங்கை குறிப்பிடத்தக்க செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. தேசிய கூட்டு அரசாங்கத்திற்கு வித்திட்ட 2015 ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2015 ஆகஸ்ட்டில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றிலிருந்து மிகவும் சுருக்கமான 2 வருடங்களும் 10 மாதங்களுமான காலப்பகுதியே இந்த செயற்பாடுகளை அடைந்து கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டது என்பதனை உங்கள் அனைவராலும் கவனிக்க முடியுமாகவிருக்கும். அரசாங்கம் அதன் மக்களுக்கு அளித்த உறுதிமொழியை உண்மையாக்குவதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்குரிய கொள்கை இணக்கம் மற்றும் நிலையான தன்மை ஆகியவற்றை இது வசதிப்படுத்தியது. அதைவிட, பொருளாதாரத்தில் நவீனத்துவம் மற்றும் நிலையான தன்மையுடையதும், ஆட்சியில் உள்ளீர்க்கும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையுடையதும், அனைவருக்குமான உரிமைகள் மற்றும் சமத்துவத்தை மதிக்கும் நாடொன்றை கட்டியெழுப்புவதற்கும் உதவியது.

**2. தேசிய அறிக்கை: புதிய வரையறைகளை வகுத்தல்**

திரு. உப தவிசாளர் அவர்களே!

- உங்களின் முன்னிலையிலிருக்கும் ஆகஸ்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட உலகலாவிய காலக்கிரம மீளாய்விற்கான எமது தேசிய அறிக்கையை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட பாதையானது, கடந்த 2008 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சுற்றுக்களில் பின்பற்றப்பட்ட வழிமுறையினின்றும் அடிப்படையில் வித்தியாசமானதாகும்.

- **திறந்த மற்றும் வெளிப்படையான செயல்முறைகளுக்கான அர்ப்பணிப்பு மற்றும் எமது பிரஜைகளின் ஈடுபாட்டிற்கான மரியாதை,** மற்றும் **கொள்கை வகுத்தலுக்கான கீழிலிருந்து மேல் நோக்கிய அணுகுமுறைகள்** ஆகியவற்றை வெளிப்படுத்துவதில், அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும், சிவில் சமூக பிரதிநிதிகளினதும், வித்தியாசமான துறைசார் நிபுனர்களினதும் ஈடுபாடுகளை உள்ளடக்கியதாக நாங்கள் விரிவானதும், உள்ளடங்கல்களுடையதுமான நடைமுறைகளை மேற்கொள்வதற்கு தலைப்பட்டுள்ளோம். அதனை மேற்கொள்வதில், நாங்கள் தற்போது உலகலாவிய காலக்கிரம மீளாய்வின் தேசிய அறிக்கைக்கான புதிய வரையறைகளை வகுத்துள்ளோம். இந்த நடைமுறை இரண்டு படித்தரங்களை கொண்டுள்ளது:

  <u>முதலாவது படித்தரம்</u>, புதிய தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டம் விருத்தி செய்யப்பட்டதன் வாயிலாக, உலகலாவிய காலக்கிரம மீளாய்விற்கான இரண்டு

சுற்றுக்களினதும் பரிந்துரைகள் இந்த திட்டத்திற்குள் உள்ளடக்கப்படுவதற்கான ஆலோசனைகளை உள்ளடக்கியது. திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கான ஆலோசனைகள், வழிகாட்டல்களை வழங்குவதற்கான அரசாங்க மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கிய இரண்டு ஒருங்கிணைப்புக் குழுக்களையும், கருப்பொருள் அத்தியாயங்களை விருத்தி செய்வதற்கான அரசாங்க மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கிய பத்து வரைவுக் குழுக்களையும், பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களை சிவில் சமூகங்களுக்கும், பிரஜைகளுக்கும் வழங்குவதற்கான இணையம் வாயிலான பொதுமக்கள் ஆலோசனைகள் ஆகியவற்றை நிறுவுவதற்கு வழிவகுத்ததுடன், அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் செயற்பாட்டுத் திட்டத்தை அமைச்சுக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐ.நா. முகவர் நிலையங்களுக்கு அவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டது.

இரண்டாவது படித்தரம், வரைவுத் தேசிய அறிக்கையை தயாரிப்பதனை அடிபெ;படையாகக் கொண்டமைவதுடன், கருத்துக்களைப் பெறுவதற்காக அதனை இணையத்தில் பதிவேற்றுதல், கருத்துக்களைக் கோரி அதனை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துதல், நாட்டின் பன்முகத்தன்மையை மதித்து, அங்கீகரிப்பதற்காக கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் மற்றும் கல்முனை ஆகிய ஐந்து நேரடி நகரங்களில் நேரடி ஆலோசனைகளை நடாத்துதல் ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

**3. அனைவருக்குமான மனித உரிமைகளை வெளிப்படுத்துவதற்காகவும், மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐக.கிய நாடுகள் முறைமை மற்றும் நடைமுறைகளுடன் புதுப்பிக்கப்பட்ட வகையில் ஈடுபடுவதற்காகவும் கடந்த காலத்துடன் கையாளுதல்**

திரு. உப தவிசாளர் அவர்களே!

- அனைத்து பிரஜைகளினதும் மனித உரிமைகளை மீள அமர்த்துவதற்கும், குற்றங்கள் மற்றும் அனைத்து பிரஜைகளினதும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காகவும், நிறுவனங்களை வலுவூட்டுவதற்குமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் கடந்தகாலத்தில் ஏற்பட்டிருக்கும் ஏதேனும் மீறல்களை விசாரணை செய்வதனை அங்கீகரிப்பதற்கும், நீங்கள் அறிந்த வகையில் சட்டத்தின் ஆட்சியில், தேசிய கூட்டு அரசாங்கமானது உண்மையை கண்டறிதல், நீதி, நட்டஈடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றின் செயற்பாடுகளில் ஈடுபட்டது.

- முன்னைய அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையுடன் பின்பற்றிய எரிச்சலூட்டும் வகையிலான உறவுமுறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, ஒவ்வொரு வருடமும் திரும்பத் திரும்ப வாக்குகளை கோருவதன் வாயிலாக தேசிய கூட்டு அரசாங்கம் பேரவையின் முன்னிலையில் கடந்த காலத்தை கையாளுவதற்கான அதன் பிரேரணைகளை முன்வைத்து, இலங்கையினால் இணை அனுசரணையளிக்கப்பட்ட 2015 ஒக்டோபர் 1ஆந் திகதிய 30/1ஆம் தீர்மானம் ஒருமித்த வகையில் அங்கீகரிக்கப்படுவதற்காக அனைத்து தரப்பினர்களுடனும் இணைந்து பணியாற்றியது.

- அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட வகையில், ஆலோசனை நடைமுறைகளைத் தொடர்ந்து பாராளுமன்ற சட்டங்களினால், காணாமல் ஆக்கப்பட்ட நபர்களுக்கான ஒரு நிரந்தரமான அலுவலகம், ஒரு உண்மையைத் தேடும் ஆணைக்குழு, விஷேட சட்ட ஆலோசகருடன் கூடிய ஒரு நீதிப் பொறிமுறை மற்றும் நட்டஈடு வழங்கும் அலுவலகங்கள் ஆகியன இந்த எதிர்ப்புகளுக்குப் புறம்பாக அமைக்கப்பட்டன. மேலும், இலங்கை 30/1

தீர்மானத்திற்கான மற்றுமொரு நீடித்த இரண்டு வருட கால அவகாசத்திற்காக பேரவை உறுப்பினர்களுடன் இணைந்து செயலாற்றியதுடன், அது இந்த வருடம் மார்ச் மாதத்தில் 34/1 என்ற தீர்மானம் வாயிலாக ஏகமானதாக வழங்கப்பட்டது.

- இலங்கையினால் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறிமுறைகள் அனைத்து இலங்கை மக்களுக்குமானதாவதுடன், அனைவருக்கும் சமமான வகையில் நன்மையளிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. மோதல்களின் போதான மனித உரிமைகள் மற்றும் மனிதாபின சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் விசாரணைகள் எனது நாட்டிலுள்ள சிலரால் துரதிஷ்டவசமாக பிழையான வகையில் பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து முற்றுமுழுதாக தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் ஜனாதிபதி அண்மையில் வலியுறுத்தியதைப் போன்று, பாதுகாப்புப் படையினர் முறையற்ற விதத்தில் இலக்கு வைக்கப்படவோ அல்லது தண்டிக்கபடவோ இல்லை. ஆனால், சட்டங்களை மீறியமை தொடர்பில் நீதித்துறை நடைமுறைகள் வாயிலாக அவற்றிற்கு மதிப்பளித்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

கௌரவ பிரதிநிதிகளே!

- இலங்கை ஐக்கிய நாடுகள் **விஷேட நடைமுறையுடனும், உடன்படிக்கை அமைப்புக்களுடனும்** தனது அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பை தீவிரப்படுத்தியது.

  *உதாரணமாக,* கடந்த உலகலாவிய காலக்கிரம மீளாய்விலிருந்து **6 உடன்படிக்கை அமைப்புக்களின் மீளாய்வுகளில்** இலங்கை பங்குபற்றியுள்ளதுடன், 2018 ஜனவரியில் திட்டமிடப்பட்டுள்ள சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை மீளாய்வில் ஈடுபடவுமுள்ளது.

  மேலும், இவற்றுள் அதிகமான மீளாய்வுகள் இந்த நடைமுறைகளுக்கான அரசாங்கத்தின் தெளிவான ஈடுபாட்டை வெளிப்படுத்தும் முகமாக 2016 மற்றும் 2017 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. நாங்கள் ஒருபோதும் மீண்டும் ஒருமுறை கடமைகளை அறிக்கையிடுவதினின்றும் தவறுவதற்கு முனையவில்லை, மாறாக இந்த காரணங்களுக்காக உட்கட்ட முறைமைகளை வலுப்படுத்துவதற்காகவும், அத்துடன் உடன்படிக்கை அமைப்புக்கள், விஷேட நடைமுறைகள் மற்றும் உலகலாவிய காலக்கிரம மீளாய்வு ஆகியவற்றின் பரிந்துரைகளை முறையாக பரிசோதித்து, பின்பற்றி நடைமுறைப்படுத்துவதற்குமான வழிவகைகளை தற்போது நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

  சிவில் சமூகத்துடன் இணைந்து நாங்கள் இந்த விடயம் தொடர்பான உட்கட்ட செயற்பாடுகளை அமைத்து, வலுப்படுத்துவதற்கான தேவைகளை குறிப்பிடுவதற்காக, ஐக்கிய நாடுகளின் நாட்டு அலுவலகம், மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் 'உலகலாவிய காலக்கிரம மீளாய்வு தகவல்' ஆகியவற்றுடன் இணைந்து செயற்படவுள்ளேறாம்.

  - 2015 டிசம்பரில், அனைத்து கருப்பொருள் விஷேட நடைமுறைகளுக்கும் **நிலையியல் அழைப்புக்களை** இலங்கை விரிவுபடுத்தியது.

  - கடந்த உலகலாவிய காலக்கிரம மீளாய்விலிருந்து **எட்டு கருப்பொருளுக்கான விஷேட நடைமுறை ஆணையுடையோர் மற்றும் தொழிற்பாட்டுக் குழுக்கள்** இலங்கைக்கு வருகை தந்ததுடன், அவற்றுள் கடந்த 2015 ஜனவரியிலிருந்து ஆறு பேர் வருகை தந்துள்ளனர்.

- மேலும், எதேச்சாதிகார தடுத்து வைப்பு மீதான தொழிற்பாட்டுக் குழுவானது இந்த வருடத்தின் டிசம்பர் 4 தொடக்கம் 15 வரையான காலப்பகுதியில் வருகை தரவுள்ளதுடன், கருத்து மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரத்திற்கான உரிமையின் பாதுகாப்பு மற்றும் மெம்பாட்டிற்கான விசேஷட அறிக்கையாளர் எதிர்வரும் வருடத்தில் வருகை தரவுள்ளார்.

**குறித்தவொரு குறுகிய காலப்பகுதிக்குள் இத்தனை அதிகமான விஷேட அறிக்கையாளர்கள் ஏதேனும் நாடொன்றுக்கு வருகை தந்திருப்பார்களா என்பது தொடர்பில் நாங்கள் வியப்படைகின்றோம்.**

**மேலும்,** 2013 மற்றும் 2016 பெப்ரவரியில் கடந்த மற்றும் தற்போதைய மனித உரிமை ஆணையாளர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன், 2016 செப்டெம்பரில் ஐ.நா. செயலாளர் நாயகம் வருகை தந்துள்ளார்.

- மீளாய்வுக் காலத்தில், இலங்கை **பல எண்ணிக்கையிலான சர்வதேச ஆவணங்களுக்கு அரச தரப்பினராகியுள்ளது**. அவற்றுள் பின்வருவனவும் உள்ளடக்கப்படுகின்றன:
  - 2015 பெப்ரவரி மாதத்தில் அங்கவீனமுடைய நபர்களின் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை
  - 2015 ஜூன் மாதத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களை கடத்துவதனை தடை செய்வதற்கான பாலேர்மொ உடன்படிக்கை
  - 2016 மே மாதத்தில் அனைத்து நபர்களும் வலிந்து காணாமலாக்கப்படுவதினின்றும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை
  - 2016 செப்டெம்பர் மாதத்தில் கண்பார்வையற்ற, பார்வைக் குறைபாடான நபர்கள் அச்சு வேலைகளுக்கு செல்வதனை வசதியளிப்பதற்கான அல்லது அச்சு முடக்கப்படுதல் மீதான மார்ரகேஷ் உடன்படிக்கை
  - 2016 செப்டெம்பர் மாதத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கை

  - 2015 பெப்ரவரி மாதத்தில் அங்கவீனமுடைய நபர்களின் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை
  - 2015 ஜூன் மாதத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களை கடத்துவதனை தடை செய்வதற்கான பாலேர்மொ உடன்படிக்கை
  - 2016 மே மாதத்தில் அனைத்து நபர்களும் வலிந்து காணாமலாக்கப்படுவதினின்றும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை
  - 2016 செப்டெம்பர் மாதத்தில் கண்பார்வையற்ற, பார்வைக் குறைபாடான நபர்கள் அச்சு வேலைகளுக்கு செல்வதனை வசதியளிப்பதற்கான அல்லது அச்சு முடக்கப்படுதல் மீதான மார்ரகேஷ் உடன்படிக்கை
  - 2016 செப்டெம்பர் மாதத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கை


- நவம்பர் 14ஆந் திகதியாகிய நேற்றைய தினம், **சித்திரவதை மற்றும் எனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவான நடத்துகைகள் அல்லது தண்டனைக்கு**

**எதிரான விருப்ப உடன்படிக்கைக்கு இலங்கை தரப்பினராகுவதற்கான** அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதனை **இன்று** இங்கு குறிப்பிடுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். இந்த விருப்ப உடன்படிக்கையின் **தேசிய தவிர்ப்பு பொறிமுறையாக** இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமிக்கப்படும். சித்திரவதையை தவிர்த்து, எதிர்ப்பதற்கான எமது நிலையான குறிக்கோளுக்கு உதவும் முக்கியமானதொரு படிமுறையாக நாங்கள் இதனைக் கருதுகின்றோம்.

- புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் மீதான உடன்படிக்கையின் 29ஆம் அத்தியாயத்தினை **நிறுவுவதிலிருந்து** இலங்கை உத்தியோகபூர்வமாக **விலகியுள்ளதுடன்**, அதற்கான வைப்பு அறிவித்தல் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் 2016 ஆகஸ்ட் 16ஆந் திகதி வெளியிடப்பட்டது.

- 2015 நவம்பரில் **குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின்** கீழான அனைத்து குறைநிலை விடயங்களிலிருந்தும் இலங்கை விலகிக் கொண்டது.

- தனிநபர் தொடர்பாடல்களை பெற்றுக்கொள்வதற்கான குழுவின் ஆற்றலை அங்கீகரிப்பதற்கான பிரகடனமொன்று சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையின் 22ஆம் அத்தியாயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**4. குடியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை பெருக்குவதற்கான மைல்க்கல்கள்**

திரு. உப தவிசாளர் அவர்களே!

- நான் தற்பொழுது குடியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை பெருக்குவதற்காக நாங்கள் அடைந்துள்ள மைல்க்கல்கள் குறித்து குறிப்பிடவுள்ளேன்.

- 2015 மே மாதத்தில் **அரசியலமைப்புக்கான 19ஆம் சீர்திருத்தத்தை** பாராளமன்றம் இயற்றியது.

  - இந்த அரசியலமைப்பு சீர்திருத்தமானது நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்ததுடன், பொதுச் சேவைகளில் அரசியலின் தலையீட்டை தவிர்ப்பதற்கான நோக்கத்தையுடைய அடிப்படை நிறுவனங்களின் சுதந்திரத்தை வலுவூட்டியது.

  - சுதந்திர ஆணைக்குழுக்களான தேர்தல் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றம் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றுக்கான நியமனங்களை மேற்கொள்ளுவதற்கான ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் தற்பொழுது 19ஆம் சீர்திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

  - அரசியலமைப்பு பேரவைக்கான உறுப்பினர்கள் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தொடர்பற்ற சுதந்திரமான நபர்களையுள்ளடக்கியுள்ளது.

- 19ஆம் சீர்திருத்தத்திற்கு முன்னர் 6 வருட காலமாக இருந்த ஜனாதிபதியின் பதவிக் காலம், 5 வருடங்களாக குறைக்கப்பட்டது.

- ஜனாபதியின் இரண்டு முறையான பதவிக்காலம் மீள நிறுவப்பட்டது.

- பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஆறிலிருந்து, ஐந்து வருடங்களாக குறைக்கப்பட்டதுடன், பாராளுமன்றத்தை கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டதுடன், தற்பொழுது ஜனாதிபதியினால் நான்கரை வருடம் பூர்த்தியடைந்த பின்னரே பாராளுமன்றத்தை கலைக்க முடியும் என்பதுடன், அவ்வாறு இல்லாவிடின் மூன்றில் இரண்டு பெரும்பாண்மை மூலமாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படல் வேண்டும்.

- இந்த சட்ட ஏற்பாடுகள் ஜனாதிபதியினதும், பாராளுமன்றத்தினதும் நிலையான பதவிக்காலத்தை நிறுவுவதன் வாயிலாக வலுவேறாக்கத்தை வலுப்படுத்துவதுடன், அரசியலமைப்பு ரீதியாக நிறுவப்பட்ட அமைப்புக்களின் சுதந்திரத்தை மீள நிறுவுவதுடன், பாராளுமன்றத்தின் மீதான நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைவடையச் செய்கின்றது.

• 19ஆம் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்** சுதந்திரம் வலுப்படுத்தப்பட்டது.

- அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லத உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்தல், சட்டவாக்கத்தை முறைப்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் தேசிய சட்டங்கள் சர்வதேச மனித உரிமைகளின் தரங்களுக்கும், மனித உரிமை உடன்படிக்கைகளின் விடயங்களுக்கு இயைபாகவும் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களில் அதிகாரமூட்டியது.

- இந்த ஆணைக்குழு நிழல் அறிக்கைகளை சமர்ப்பித்து அண்மைய உடன்படிக்கை அமைப்புக்களின் மீளாய்வுகள் தொடர்பில் செயற்பட்டதுடன், தற்போதைய உலகலாவிய காலக்கிரம மீளாய்வில் ஆணைக்குழுவின் பங்களிப்புக்களை நாமும் வரவேற்கின்றோம். அடுத்த வருடத்தில் இந்த ஆணைக்குழுவிற்காக அரசாங்கம் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்யவுள்ளது.

- 2015 ஆண்டு பெப்ரவரில் பாராளுமன்றத்தினால் '**குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாத்தல் மற்றும் உதவுதல் சட்டம்**" ஏற்படுத்தப்பட்டமை மற்றும் அதனைத் தொடர்ந்து சட்ட ஆட்சியின் முழுமையான செயற்பாடு ஆகியன ஒருபக்கம் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் உரிமங்களுக்கும், மறுபுறம் சந்தேகநபர்களுக்கும் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கிடையில் ஒரு முழுமையான சமநிலையை வழங்கியுள்ள ஒரு முக்கியமான மைல்கல்லாக அமைகின்றது

- இந்தச் சட்டமானது குற்ற நீதி முறைமையில் குறிப்பிட்ட மாற்றத்தை உண்டாக்குகிறது. இந்தச் சட்டமானது குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் உரிமங்களை அளிப்பதாக அமைந்துள்ளது.

- இது குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டு கொடுப்பனவை வழங்குவதோடு, இந்த நோக்கத்திற்கான விசேட நிதியம் ஒன்றை நிறுவுகின்றது.

- இந்த சட்டத்தின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆந் திகதி தேசிய அதிகாரசபை தாபிக்கப்பட்டது. இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட பாதீட்டு ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

- குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களின் பாதுகாப்பிற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் பொலிஸ் மா அதிபர் திணைக்களத்தினால் இலங்கை பொலிஸார் சாட்சியங்கள் பாதுகாப்பு பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

- குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களின் சாட்சிகளை பதிவு செய்தல் அல்லது ஒலி-காட்சிகள் மூலமான கூற்றுக்கள் ஆகியவற்றை நீதிமன்றத்தின் தனியாளாக வருகை தாராமல் இலங்கைக்கு வெளியே எந்தவொரு இடத்திலிருந்தும் பெறக்கூடிய வகையிலும் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக இத்தகைய செயல்பாடுகளை வசதிப்படுத்தும் வகையிலும் நவம்பர் 7 ஆந் திகதி இந்த சட்ட சீர்திருத்தம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- **தகவல்களை அறியும் உரிமையானது அடிப்படை உரிமையாக அடையாளப்படுத்தப்பட்டமையினால்** அரசியலமைப்பின் 19 ஆவது சீர்திருத்தம் ஊடாக **தகவல் அறியும் உரிமைச் சட்டம்** இயற்றப்பட்டது.

- இந்தச் சட்டமானது 2017 பெப்ரவரி 3 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

- இது வெளிப்படைத்தன்மை மற்றும் பொது அதிகார சபைகளின் பொறுப்பு கூறல் தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதுடன், ஊழலையும் ஒழிக்கிறது.

- பொதுமக்களுக்கு தகவல்களை அறிந்துகொள்வதற்கான உரிமை வழங்கலை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, குடிமக்கள் தங்களது பொது வாழ்வில் முழுமையான ஈடுபாட்டுடன் இருக்கக்கூடிய சமூகத்தை நாம் ஊக்குவித்து வருகிறோம்.

- தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவானது இந்த சட்டத்தினை வசதிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அநேகமான பொது அதிகாரிகளிடமிருந்து தகவல்களை பெறுவதற்கான கோரிக்கையுடன் பொதுமக்கள் ஏற்கனவே அனுகூலங்களைப் பெறத் தொடங்கியுள்ளனர்.

- பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவதன் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்துதல். இவ் விடயம் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது.

- பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை அடையாளப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- பாகுபாடு சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் தாக்கம் செலுத்தும் சட்ட ஏற்பாடுகள் உள்ளடங்கலாக முன்னெடுக்க வேண்டிய கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைகள் மற்றும் பாகுபாடு காட்டப்படும் தனிப்பட்ட சட்டங்களின் சீர்திருத்தம் தொடர்பான அதிரடி செயற்பாடுகள்.

- சிறுவர் உரிமையான முழுமையான மகிழ்ச்சியை உறுதிப்படுத்தும் சிறுவர் தொழிலாளிகளை இல்லாதொழிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள். கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சிறுவர் பாதுகாப்புக்கான விசேட சனாதிபதி செயலணியானது, அதிமேதகு சனாதிபதி அவர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்பட்டு வருகிறது. 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அரசாங்கத்தின் உயர்மட்டத்தின் உறுதிப்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில், 'சிறுவர் தொழிலாளிக்கு எதிரான தினம்' இனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் '**சிறுவர் தொழிலாளிகளின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை**' எனும் உறுதிமொழியில் சனாதிபதி கைச்சாத்திட்டிருந்தார்.

- இலங்கையில் **உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு** ஆதரவளிக்கும் வகையில் அவர்களது நல்வாழ்வு மற்றும் வாழ்க்கைத்தரம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட மோதல்களின் போது உள்நாட்டினுள் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 300,000 இற்கும் மேற்பட்டதாகும். இன்று யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் உள்நாட்டினுள் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 765 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுள் 3000 இனையும் விட குறைவாகும். அரசாங்கமானது **உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு சரியானத் தீர்வுகளை வழங்குவதற்கான** முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் உள்ளடங்கலாக முக்கிய பங்குதாரர்களுடன் பரந்துபட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அபிவிருத்தி செய்யப்பட்ட 'வன்முறைகளினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கான சரியானத் தீர்வுகள் தொடர்பான தேசியக் கொள்கை' இற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

- **நிலையான அபிவிருத்தி கொள்கைகளுடன்** கூடிய **முழுமையான பொருளாதாரமானது,** எமது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான மையமாக காணப்படுகிறது. எமது மக்களின் ஆர்வங்களுடன் தொடர்புடைய மனித உரிமைகள் மற்றும் நீண்டகால வாழ்வாதாரம், குறிப்பாக நீடித்த சமாதானம், நல்லிணக்கம் மற்றும் வன்முறைகள் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தல், பொருளாதார வளர்ச்சி மற்றும் நியாயத் தேவைப்பாடுகள் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் ஊக்குவித்தல். இது அரச பொறுப்பாகும். 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்;பட்ட தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தின் பொருளாதாரமானது அதிகளவிலான கடன் சுமையை தாங்குவதுடன், இது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

  - நவம்பர் மாதம் 7 ஆந் திகதி கடந்த வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டமானது நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதுடன், '**நீல - பசுமை வரவு செலவுத்திட்டம்: என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா**' என தலைப்பிடப்பட்டுள்ளது. இது முயற்சியாண்மை உந்துசக்தியை எழுச்சியடையச் செய்து இலங்கையை சிறந்த வர்த்தக மையமாக உருவாக்கச் செய்வதுடன், வளமான நாட்டின் துணை உரிமையாளர்களாக அனைத்து இலங்கையர்களையும் ஊக்குவிக்கிறது.

- நீல - பசுமை பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி மூலோபாயம் என்பது பாரீஸ் உடன்படிக்கைக்கான எமது சர்வதேச உடன்பாடுகளுக்கோ அல்லது 2030 அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடனோ ஒன்றிணைந்து காணப்படவில்லை. ஆனால் மிக முக்கியமாக எமக்கும், எமது தலைமுறையினருக்குமாகவும், எமது சொந்த நாட்டில் மட்டுமல்லாது, உலகளாவிய சமூகத்தில் பொறுப்பான அங்கத்தவராகவும் மற்றும் நாம் அனைவரும் ஒரே வீடு என அழைக்கும் ஒரே உலகத்தில் இணை குடியிருப்பாளர் என்ற ரீதியில் பொறுப்பினைக் கொண்டுள்ளோம்.

- நாம் 4 ½% ஆக நிலையான **மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை** பேண எம்மால் முடிந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் 5% வளர்ச்சியை அடையும் என எதிர்பார்த்துள்ளோம்.

- அரசாங்க கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் உள்ளடக்கக்கூடிய 17 **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை,** 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலில் நடைமுறைப்படுத்துவது நோக்கி நாம் செயற்பட்டு வருகிறோம்.

- 2017 ஆம் ஆண்டு ஒக்டோபரில் பாராளுமன்றத்தினால் அளிக்கப்பட்ட 'இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டம்' எனும் பத்தியானது, ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிரலிற்கு இணங்கிய அரசாங்கத்தின் உறுதிமொழிகளை மேம்படுத்துவதற்கான ஒரு படிமுறையாக காணப்படுகிறது. இந்த செயல்முறையை வசதிப்படுத்துவதற்கான சட்டத்தை வழங்கியுள்ள ஒருசில நாடுகளில் இலங்கையும் ஒன்றாகவுள்ளது என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

• இந்த சட்டமானது, அதன் சொந்த தேசிய ஆர்வங்களுடன் தேசியக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குகிறது. ஆனால் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினால் வழிநடத்தப்படுகிறது.

• **மொழி மற்றும் காலாச்சார உரிமைகளுக்காக**, 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரசாங்கத்தின் மூலமாக தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதற்கான எந்தவொரு தடைகளும் இல்லையென அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும்; சுற்றறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தது. 68 வருடங்களில் முதல் முறையாக, 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது உத்தியோகபூர்வ மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் மூலமாக தேசிய கீதம் பாடப்பட்டது. இந்த நடைமுறை ஏனைய நிகழ்வுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

  - சட்ட அமுலாக்க பொறிமுறைகளை அணுகுவதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மக்கள் முகம் கொடுக்கும் மொழித் தடைகள் அடையாளப்படுத்தப்பட்டு, 2016 ஆம் ஆண்டு 216 தமிழ் பேசும் ஆண் பொலிஸ் அதிகாரிகள், 26 தமிழ் பேசும் பெண் பொலீஸ் அதிகாரிகள் மற்றும் 14 தமிழ் பேசும் உப-பொலீஸ் அதிகாரிகள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

• முன்னர்; குறிப்பிட்டதைப் போன்று தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டு திட்டம் மற்றும் அனைத்துலக காலக்கிரம அறிக்கைக்கான தேசிய அறிக்கை ஆகியவற்றின் உருவாக்கல் செயல்முறைகளில் இடம்பெறும் **பொது ஆலோசனைகள்** ஆகியன நாட்டின் **அனைத்து முக்கிய செயல்முறைகளிலும்** பின்பற்றப்படுகின்றன. இது நீடித்ததன்மைக்கு

ஏற்பாடுகளுக்கு **கீழ்நிலை அணுகுமுறைகள்** தேவையென் அரசாங்கம் திடமாக நம்புவதன் காரணமாக ஏற்படுகிறது.

- நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பில் தேசியளவிலான ஆலோசனைகளை முக்கிய சிவில் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பதினோறு பேர் கொண்ட **ஆலோசனை செயலணி** மேற்கொண்டுள்ளது. இந்த செயல்முறை ஊடாக பெறப்படும் உள்ளடக்கங்கள் உண்மைத்தன்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் நஷ்டஈட்டு அலுவலகத்தின் ஆரம்ப வடிவமைப்பு மற்றும் வரையறைகளில் பயன்படுத்தப்பட்டதுடன், இத்தோடு தொடர்புடைய ஏனைய நல்லிணக்க செயல்முறைகளுக்காக தொடர்ச்சியாக நாம் கவனம் செலுத்துகிறோம். ஆலோசனை செயலணி அங்கத்தவர்கள் மற்றும் வலய செயலணி அங்கத்தவர்கள் ஆகியோருடனான வழக்கமான ஆலோசனைகள், நல்லிணக்க பொறிமுறைகள் ஒருங்கிணைப்புக்கான செயலகத்தின் மூலமாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- நல்லிணக்க பொறிமுறைகள் அமைக்கப்பட்டதன் பின்னர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, 1990 இல் நிறுவப்பட்ட காணாமல்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான சனாதிபதி ஆணைக்குழு, காணாமல்போனோர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான பரணகம ஆணைக்குழு என அறியப்படும் சனாதிபதி ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் முகவர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் அறிக்கைகள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள மனித உரிமை அமைப்புக்கள் ஆகிய சனாதிபதி ஆணைக்குழுக்களை உள்ளடக்கிய முந்தைய செயல்முறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகள், தரவுகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை தங்களுக்கு பயன்படுத்திக் கொள்வர்.

- இந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட **பொது பிரதிநிதித்துவ குழுவின்,** அரசியலமைப்பு சீர்திருத்தத்துடன் தொடர்புடைய பரந்துபட்ட பொது ஆலோசனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த **அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறையானது** வன்முறைகள் மீள நிகழாமலிருப்பதற்கு உத்தரவாதமளிப்பதற்கான நடவடிக்கைக்கான முன்னுரிமையாகக் கொண்டு காணப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து அரசியலமைப்பு சட்டமன்ற உருவாக்கம் தொடர்பான தீர்மான கட்டமைப்பை பின்பற்றல் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறை தொடர்பான பணிகளை முன்னெடுத்தல் ஆகியவற்றை ஏற்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தின் 1 ஆவது வருட நிறைவை முன்னிட்டு 2016 ஜனவரி 9 ஆந் திகதி பாராளுமன்றத்தில் விசேட அமர்வு ஒன்று நடைபெற்றது. இந்தத் தீர்மானம் மார்ச் மாதம் ஏகமனதாக பின்பற்றப்பட்டது. அடிப்படை உரிமைகள், நீதித்துறை, சட்டம் மற்றும் ஒழுங்கு, பொது நிதி, பொது சேவை மற்றும் மத்திய உறவுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விசேட பிரச்சினைகள் தொடர்பான சிபாரிசுகளை மேற்கொள்ளும் வகையில் ஒரு வழிகாட்டும் குழுவும், ஆறு உப குழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையானது, இந்த வருடம் செப்டெம்பர் மாதம் 21ஆந் திகதி பிரதமரால் அரசியலமைப்பு சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இது ஒக்டோபர் 30 முதல் நவம்பர் 3 ஆந் திகதி வரை 5 நாட்களுக்கு அரசியலமைப்பு சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. வழிகாட்டல் குழுவினால் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் மேலதிக ஆலோசனைகள் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. புதிய அரசியலமைப்பின் பிரயோகம்,

சர்வசன வாக்கெடுப்பின் மூலமாக மக்களின் அனுமதியை பெற்றதைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

**5. செயலாக்க தீர்மானங்கள் 30/1 மற்றும் 34/1 மற்றும் நல்லிணக்கம்**

திரு. உப தவிசாளர் அவர்களே,

- **30/1** மற்றும் **34/1** தீர்மானங்களில் உறுதிப்பாட்டினை செயல்முறைப்படுத்துடன் தொடர்புபட்ட ஒருசில முன்கூட்டிய கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினால், அவர்களது நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்வதற்கான எமது திடமான உறுதிப்பாட்டினை மீளுறுதி செய்வதற்கு நான் விரும்புகிறேன். உங்களில் பலரது ஆதரவு உள்ளடங்கலாக இந்த குறிக்கோள் நோக்கி தொடர்ச்சியாகவும், முறையாகவும் நாம் செயலாற்றி வருகிறோம்.

  - இந்த வருடம் செப்டெம்பர் 15 ஆந் திகதி செயற்பாட்டுக்கு வந்த **காணாமல் போனோருக்கான அலுவலகமானது,** கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான எமது வரவு செலவு திட்டத்தில் அதன் தாபிப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட **1.4 பில்லியன் ரூபாய்** செலவில் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க பொறிமுறைகளில் முதலாவதாக காணப்படுகின்றது.

கௌரவ பிரதிநிதிகளே,

  - எமது வரலாற்றில் முதல் முறையாக, 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவு திட்டத்தின் ஒரு பிரிவு நல்லிணக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முதலீட்டிற்கான வளமான சூழலை பராமரிப்பு செய்தல், பாதுகாப்பு மற்றும் நிலைபேற்றுநிலையை வலுப்படுத்தல் என்பவற்றினூடாக முழுமையான பொருளாதார கொள்கையாக நல்லிணக்கம் மற்றும் சமானதானத்தில் முதலீடுகள் மீது நாம் கவனம் செலுத்துகிறோம். அதுபோல, வருமான வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பினை மேம்படுத்தும் முழுமையான பொருளாதாரக் கொள்கையானது நீண்டகால சமாதானம், பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான நிபந்தனைகளை கட்டியெழுப்ப எமக்கு உதவுகின்றது.

**6. பிரச்சினைகள் மற்றும் சவால்கள்**

திரு. உப தவிசாளர் அவர்களே,

- இந்த பணிக்குழுவுடன் நாம் வெளிப்படையாக விடயங்களை பகிர்ந்து கொள்கிறோம். 2015 ஆம் ஆண்டு பாராளுமன்ற மற்றும் சனாதிபதி தேர்தல் நடைபெற்றது முதல் மிகக்குறுகிய காலத்தினுள் எமது மனித உரிமைகள் கடப்பாடுகளில் பலவற்றை நாம் அடைந்து கொண்டுள்ளோம்.

- எமது தூரநோக்கு நீண்ட காலத்துக்குரியது. எமது தேசத்தின் அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகளில் திடமாக சூழப்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்களை நாம் காண விரும்புவதுடன், விழிப்புணர்வு மற்றும் புரிந்துணர்வு ஊடாக தமது உரிமைகளை பெறுவதற்கான செயல்முறைகளில் மக்களின் ஈடுபாட்டினை உறுதி செய்துள்ளோம். இது குறிப்பிடத்தக்க மாற்றத்தை உண்டாக்கியுள்ளதுடன், இது நீடித்ததாகவும், நிலையானதாகவும் அமையும் என நாம் நம்புகிறோம்.

கௌரவமானவர்களே, எமது ஒருசில பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் நாம்; பகிர்ந்துகொள்வோம்.

- இலங்கை தேவையானளவு நிறைவேற்றியுள்ளது. இருந்தபோதிலும், இதனை ஒரு மெத்தனமாக நாம் கருதவில்லை. மேலும் ஒருசிலர் குறிப்பிடுவதைப்போல மனித உரிமைகள் தொடர்பிலான வேறுபாட்டினையோ அல்லது அக்கறையின்மையுடனோ நாம் செயற்படவில்லை. எமது அனைத்து குடிமக்களும் அவர்களது முழு ஈடுபாடு காரணமாக தத்தமது உரிமைகளை அனுபவிப்பதை உறுதிப்படுத்துவதற்காக மேலும் பல விடயங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம். தத்தமது தனிப்பட்ட உரிமைகள் மூலமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள குடிமக்கள் எமது தேசத்தை வலுப்படுத்துவர் என நாம் திடமாக நம்புகிறோம்.

- கடந்த 35 மாதங்களுக்கும் மேலான எமது சாதனைகள், கீழ்காணும் படிமுறைகளை முன்னெடுப்பதற்கான அபிவிருத்தியடைந்து வரும் தேசமாக காண வேண்டும் என நாம் உணர்கிறோம்:

    - நிர்வாகம், நிறுவனங்கள், அரசியலமைப்பு, சட்டம், பொருளாதாரம் மற்றும் மனித உரிமைகள் உள்ளடங்கலாக சட்ட ஏற்பாடுகள் ஊடாக மோதல்கள் மீள நிகழாதிருப்பதை உறுதிசெய்தல்.

    - சமூகங்களுக்கிடையிலான அவநம்பிக்கையை ஆற்றுப்படுத்துதல் மற்றும் வெவ்வேறுகாலக்கட்டங்கள் மற்றும் வெள;வேறு வழிகளில் தெற்கில் இரண்டு இளைஞர்களின் கலகங்கள் உள்ளடங்கலாக அனைத்து சமூகங்களையும் பாதித்த நீண்டகால வன்முறை மற்றும் நிராகரிப்பு ஊடாக பாதிக்கப்பட்ட அரச நிறுவனங்களில் நம்பிக்கை மீளுருவாக்குதல். மற்றும்

    - அனைத்து மட்டங்களிலுமுள்ள நிறுவனங்களின் செயல்பாடுகளில் நல்லாட்சிஇ வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்திறன் ஆகியவற்றின் தரத்தை மீள உருவாக்குதல்.

- எதிர்பாராத விதமாக, ஒவ்வொரு படிமுறையும் தேசத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும், எமது கடந்தகால கசப்பான அனுபவங்களை ஒப்புக்கொள்வதாகவும் அமைந்துள்ளது. மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கான எமது முயற்சிகள் அடிக்கடி வெளிநாட்டு தலையீட்டினால் அழைக்கப்படும் எதிரிகளால் அடிக்கடி தாக்கப்பட்டு வருகின்றன. வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த சமூகங்களுக்கிடயே இணக்கமான உறவுகளை உறுதிப்படுத்துதவற்கான எமது முயற்சிகள் மற்றும் பிரவுகளை உருவாக்க முயற்சிக்கு எதிரிகளின் தாக்குதல்க்ள அடிக்கடி இடம்பெறும் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான எமது உறுதிப்பாடுகள். இருந்தபோதிலும், நாம் வலுவான உறுதியுடன் நிலைத்துள்ளளோம்.

- ஜனநாயக நாடு என்ற ரீதியில், மனித உரிமைகள் மற்றும் நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் முழுமையான அனுபவம் நோக்கிய எமது பயணம் தொடர்பான விவாதங்கள் மற்றும் விமர்சனங்கள் ஆகியவற்றை நாம் வரவேற்கிறோம். ஆனால் ஏனைய பல ஜனநாயகங்களைப் போல, எமது பொது ஆர்வமானது ஒருசில தவறான தகவல்கள், சூழ்ச்சி மற்றும் தப்பெண்ணம் ஆகியவற்றை கொண்டுள்ளமை தொடர்பில் நாம் விழிப்புடன் உள்ளோம். இதன் காரணமாகவே மனித உரிமைகளை

பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில் தேசியளவிலான ஒருமித்த கருத்தை நீடித்தல் மற்றும் கட்டியெழுப்பல் தொடர்பான கண்ணோட்டத்துடன் எச்சரிக்கையுடனும், புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டு வருகிறோம். ஒரு தேசம் என்ற ரீதியில், நாம் நீண்டகாலமாக கசப்பான விடயங்களை அனுபவித்துள்ளோம். இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து பணியாற்றிவரும் வரலாற்று சிறப்பு மிக்க இத் தருணத்தில், நாம் முன்னெடுத்த சீர்திருத்தமானது நீண்டகாலத்திற்கு நிலையான இருப்பதை உறுதிசெய்தவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதை நாம் உறுதி செய்து வருகிறோம்.

**7. முடிவு**

- இறுதியாக திரு.உப தவிசாளர் அவர்களே, அனைத்துலக காலக்கிரம தேசிய அறிக்கை தயார்படுத்தல் செயல்முறையின் போதும் மற்றும் அவர்களது நிழல் அறிக்கையின் போதும் சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் பிரதிநிதிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கிய பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பில் ஒவ்வொரு நபருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

- தற்போது செயலாற்றி வரும் செயலணி குழு மற்றும் ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகள் அனைத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- திரு. உப தவிசாளர் மற்றும் பணிக்குழு செயலகத்திற்கு அவர்கள் அளித்த தொழில்நுட்ப ஆதவிற்கும் மற்றும் புருண்டி, இலங்கை மீளாய்வுக்கான கொரிய குடியரசு மற்றும் வெனிசுலா ஆகியவற்றின் ஒத்துழைப்பை நல்கிய ட்ரொய்காவிற்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

- தற்போது நாம் உறுப்பு நாடுகளுக்கு செவிமடுப்பதுடன், நான் மற்றும் எனது பிரதிநிதிகள் தேவையேற்படின் நான் பதிலளிப்போம்.

நன்றி!